நாவாந்துறைப் படிப்பகம்

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 26 திங்கட்கிழமை (10-07-2000) VALAMPURI ஒளி: 203

★ அரசு-ஐ.தே.க.இணங்கிய முக்கியவிடயங்கள்தொடர்பாக

ஜனாதிபதி - தமிழ்க்கட்சிகள் இன்று சந்தித்துப்பேசுவர்!

ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளும்

(கொழும்பு அலுவலக நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பொதுஜனஐக்கிய முன்னணி அரசுக்கும், முக்கியஎதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சிக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தமிழ்க்கட்சித் தலைவர்களை இன்று சந்திக்கின்றார்.

அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது ஐக்கிய தேசியக்கட்சியின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவும் கலந்து கொள்கிறது

பொதுஜனஐக்கிய முன்னணி அரசுக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட முக்கிய அம்சங்கள் தொடர்பான விபரங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், ஆகியதமிழ்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டு அவை தற்போது தமிழ்க்கட்சிகளிடையே தனித்தனியாக பரிசீலனையில் இருந்து வருகிறது.

அரசினதும், ஐக்கியதேசியக் கட்சியினதும் இத்தீர்வு யோசனையை ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்த நிலையிலும், நாட்டைத்துண்டாடுவதற்கு

(6ஆம் பக்கம்பார்க்க)

அரசாங்கத்தை நாம் தனித்து சந்தித்துப் பேச்சு நடத்துவோம்

தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே அதிகாரப் பகிர்வு தொடர்பாக இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக அரசைத் தனியாகச் சந்தித்து பேசப் போவதாகதமிழர்விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பாக அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அதிகாரப் பரவலாக்கல் பேச்சுக்கு புலிகளையும் அழைக்க வேண்டும்

தமிழக கம். தலைவர் ஆர். நல்லக்கண்ணு

[சென்னை]

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகஇலங்கை அரசு அதிகாரப் பரவலாக்கல் மூலம் கூடுதல் அதிகாரங்களை பிராந்தியங்களுக்கு வழங்க முன்வந்தமை நீண்ட காலப்பிரச்சினைக்கு முடிவு கட்டும் நல்ல அறிகுறியாக தெரிகிறது.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் ஆர். நல்லக்கண்ணு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருச்

(6ஆம்பக்கம் பார்க்க)

ஐ. தே. கட்சி எம்.பிக்கள் 10 பேர் பொ.ஐ.ஐ.முன்னணி அரசுக்கு ஆதரவு?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் பத்து எம்.பிக்கள் பொது ஜனஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கப்போவதாகறொனிடி மெல் தெரிவித்துள்ளார்.

பத்து எம்.பிக்கள் அரசை ஆதரிக்கும் பட்சத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக

அரசு-ஐ.தே.க.பேச்சில் இணக்கம் தொழிற்சங்கங்கள் பாராட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால கொண்டு வரப்படவுள்ள உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இணக்கம் காணப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்

(6ம் பக்கம் பார்க்க)

பயணிகள் கப்பல் இன்று புறப்படும்

பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு ''சிற்றி ஒவ் றிக்கோ'' கப்பல் இன்று திங்கட்கிழமை திருகோணமலைக்கு செல்லவுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வீதிச் சோதனை

(யாழ்ப்பாணம்)

குருநகர் மற்றும் கானடி போன்ற பகுதிகளில் நேற்றுக் காலை படையினரின் வீதிச் சோதனை நடவடிக்கைகள் வழமையைவிட சற்றுதீவிரமாக காணப்பட்டன.

வீதியால் பயணம் செய்வோரின்அடையாள அட்டைகள் படையினரால் நுணுக்க

(6ஆம்பக்கம் பார்க்க)

வன்னியில் மர்மப்பொருள் வெடித்து மூவர் காயம்

(வவுனியா)

மாங்குளம் ஒலுமடுப் பகுதியில் குப்பைக்குள் இருந்த மர்மப்பொருள் வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படுகாயம் அடைந்து மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

நவாலிப் படுகொலை நினைவு மக்கள் கண்ணீர் சிந்தி அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்பீற்றர்தேவாலயத்தில் 1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 157 பொது மக்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று ஆகும். இதனை ஒட்டி நேற்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

உத்தேச நகல் திட்டம் தொடர்பாக

இருபெரும் கட்சிகளின் இணக்க நிலை வரவேற்கத்தக்கது; வரதர் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச அரசியல் யாப்பு நகல் திட்டம் தொடர்பாக இலங்கையில் முக்கிய இரு பெரும் அரசியல் கட்சிகளுக்குள் இணக்க நிலை ஏற்பட்டமையானது வரலாற்றில் ஓர் முக்கிய நிகழ்வு என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரமுகர் அ. வரதராஜப்பெருமான் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: மேற்படிநகல்திட்டம்தமிழ்மக்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய அம்சங்கள் பல முழுமையாக காணப்படாவிட்டாலும்கூட எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு இது நல்ல ஒரு சகுனம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்றுமுதல் மா ஒருகிலோ ரூ.14-95சதம் 350 கிராம் பாண் ரூபா 7-50 சதம்

யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இன்றிலிருந்து ஒரு கிலோ கோதுமை மாவின் சில்லறை விலை ரூ.14-95 சதமாக விற்பனை செய்யப்பட வேண்டுமென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதே வேளை யாழ்.மாவட்டப் பேக்கரி உரிமையாளர் சங்கம் ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் பாணின் விலையும் இன்றிலிருந்து ரூ. 7-50 சதமாக விற்பனை செய்யப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசும்-ஐ. தே. கட்சியும் இணைந்து நாட்டைத் துண்டாட முயல்கின்றன

கண்டித்து 12ஆம் திகதி ஜே. வி. பி. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசினாலும் ஐக்கிய தேசியக் கட்சியினாலும் இணக்கம் காணப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அரசு நாட்டைத்துண்டாட முயல்கிறது எனக்குற்றம் சாட்டியும்வெலிவாரி ஏற்றத்தைக் கண்டித்தும் கொழும்பில் ஜே.வி.பி. மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 12ஆம் திகதி நுகேகொடையில் இவ்வார்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அரசாங்கமும் எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியும் இணைந்து நிறைவேற்ற

இந்தியாவிற்கு அதிகாரங்களை வழங்குவதாகக்கூறிஇவ்வதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதன் மூலம் நாட்டைத் துண்டாட முயன்று வருவதாக குற்றம் சாட்டியே இவ்வார்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக தெரிய வருகிறது.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வேதும் மயிலும் துணை

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம கோவில்

உற்சவமும் நூல் வெளியீடும்

எதிர்வரும் 11-07-2000 செவ்வாய்க்கிழமை ஆறுமுகப் பெருமானின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு

விசேட அபிஷேக ஆராதனைகளும் உற்சவமும் நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து பி. ப. 2 மணிவளவில்

"சுப்ரஹ்மண்யார்ச்சனம்"

(முருகனுக்குரிய அர்ச்சனை நாமாவளிகள் அடங்கிய சமஸ்கிருத நூல்)

நூல் வெளியீட்டு விழா நடைபெறும்.

தலைவர்: சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்

சிறப்புரை: பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) [B. A. (Hons)]

நூல் வெளியீடு: சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

கௌரவப் பிரதி பெறுபவர்: சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள்

பதில் உரை: சிவஸ்ரீ கு. தியாகராச சர்மா

நன்றி உரை; சிவஸ்ரீ சா. சோமதேவக்குருக்கள்

நீர்வேலி. செல்லக் கதிர்காம தேவஸ்தானம்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு — 1948 — 04 — 03



உதிர்வு — 2000 — 06 — 11

திருமதி கந்தசாமி அன்னலெட்சுமி

திதி: 10-07-2000

நயினைத் தாய் பெற்றெடுத்த நற்றமிழின்
ஒளிவிளக்கே!
நாகரிமை வளர்த் தெடுத்த நல்லிதயப்
பேரெழிலே!
உந்தனின் இதயமதைப் பற்றாகப் பற்றி
நின்றீர்!
உறவுகளைத் தவிக்க விட்டு ஏனி மறைந்தாய்
எம் உயிரே!
வாரங்கள் சில கடந்தும் வற்றவிலை
உம் நினைவு
வசந்தங்கள் வந்தபோது பறித்து விட்டான்
உம் உயிரை
காலங்கள் கடந்தாலும் கலையாது
உம் நினைவு
கதறி மனம் துடிக்கிறது காத்து நிற்பார்
யாரம்மா?
தலைவனை இழந்து நின்றும் தனித்து நின்று
எமை வளர்த்தீர்
தாயின்மை ஊட்டி எமைத் தக்கவராய்
வாழ வைத்தீர்
தன் உடன் பிறப்புதனைத் தருணத்தில்
காத்து நின்றீர்
தாயன்பை யாம் இழந்து இத் தாயகத்தில்
வாழுவமோ?
அன்னத்தின் வடிவுடைய அழகொளிரும்
அன்னலெட்சுமியே!
எண்ணத்தில் உயர்வுடனே ஏற்றமுடன்
வாழ்ந்து நின்றீர்
கண்ணிரை வடித்துநின் நோம் காலனவன்
பறித்து விட்டான்
கண்மணியின் தாரகையே கடவுள் பதம்
சேர்வாய் அம்மா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது இறுதிச் சடங்கினைகளில் கலந்து கொண்டோருக்கும் மலர் வளையங்கள் அர்ப்பணித்தோருக்கும், பத்திரிகை, கடிதம், தொலைபேசி வாயிலாக அஞ்சலி தெரிவித்தோருக்கும் பல்வேறு உதவிகள் புரிந்த உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனிகள், மைத்துனிகள்.

வட்டாரம் - 5,
நயினாதீவு.

[1471]

டிப்ளோமா பயிற்சிநெறிக்கு நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

தேசியகல்வி நிறுவகத்தின் டிப்ளோமா பயிற்சி நெறிக்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் 15 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெற வுள்ளது.

14 ஆம் திகதி பிற்பகலும் 15 ஆம் திகதி நாள் முழுவதிலும் பரீட்சை நடைபெற விருப்பதினால்மேற்படிபயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களை பட்டதாரிச் சான்றிதழ் மற்றும் புகைப்படப்பிரதி சம்பந்தப்பட்ட பாடசாலை மூலம் அதிபரினால் வழங்கப் பட்ட உறுதிப்படுத்தற் கடிதம் மற்றும் வேறு தகுந்த ஆவணங்களுடன் பரீட்சை யில் கலந்து கொள்ளுமாறு பிரதேச விரிவுரையாளர் கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (உ)

மந்திகை மருத்துவமனையில் நீரிழிவு மருந்துக்கு தட்டுப்பாடு நோயாளர் பெரிதும் அவதி

(மந்திகை)

மந்திகை மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கான மருந்துகள் இன்மையால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மருத்துவமனைக்குச் செல்லும் நீரிழிவு நோயாளர்களை நீரிழிவு நோய்க்குப் பயன் படுத்தப்படும் இன்சுலின் ஊசிமருந்து மற்றும் ஏனைய மருந்துகளை வெளிக் கடைகளில் வாங்கிப் பாவிக்குமாறு மருந்துச்சீட்டு எழுதிக்கொடுப்பதாக தெரிய வருகிறது.

இம்மருந்துகளை தனியார் மருந்தகங்களில் பெறுவதானால் தொகையான பணம் செலவிடப்பட வேண்டும் எனவும், இதனால் வறுமையில் வாடும் நோயாளர் நிலை பரிதாபகரமாக மாறிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-28)

இனிமையான வரவேற்பு

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு 2000/2001 ஆம் ஆண்டுக்கென தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களை, இரண்டாம் வகுப்பு மாணவர்கள் கடந்த புதன் கிழமை கற்கண்டு வழங்கி வரவேற்றனர்.

(உ-48)

குருநகர் உத்திரமாதா கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் உத்திரமாதா தேவாலயவருடாந்தமதநிகழ்வுகள் வியாழக்கிழமை 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 3.30 மணியளவில் நற்கருணை ஆராதனை இடம் பெற்று 16 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் வருடாந்த மதநிகழ்வுகள் முடிவடையும். (உ)

வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால்அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தைவைத்தியம், விரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்;

வேலணை
வைத்தியகலாநிதி,
சி. இராசரத்தினம்,

112,2ஆம்குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்
2459

(1218)

பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 9 ம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலர் ரீதியாக தரப்படுகின்றது.

சங்கானை

143781 ஏ	143843 ஏ
144069 ஏ	144069 பி
144066 சி	144094 ஏ
144094 பி	144094 பி
144159 ஏ	144159 பி
144160 ஏ	147237 ஏ

யாழ்ப்பாணம்

130357 ஏ	137170 ஏ
137170 பி	137170 சி
137170 டி	137170 ஈ
143170 ஏ	143170 பி
144278 ஏ	144287 ஏ
144287 பி	144287 சி
144287 டி	144287 ஈ
144296 ஏ	144296 பி
144323 ஏ	144340 ஏ
144340 பி	144340 சி
144345 ஏ	144345 ஏ
144346 பி	144346 சி
144346 டி	144365 ஏ
144465 பி	144365 சி
144425 ஏ	144425 பி
144428 ஏ	144435 ஏ
144435 பி	144435 சி
144435 டி	144437 ஏ
144440 ஏ	144440 பி
144459 ஏ	144459 பி
144459 சி	104474 ஏ
144483 ஏ	144483 பி
144483 சி	144483 டி
144483 ஈ	144483 எவ்
144493 ஏ	144501 ஏ
144501 பி	144517 ஏ
144519 ஏ	144519 பி
144519 சி	144522 ஏ
144522 பி	144538 ஏ
144538 பி	144548 ஏ
144548 பி	144548 சி
144548 டி	144562 ஏ
144602 ஏ	144617 ஏ
144617 பி	144617 சி
144619 ஏ	144710 ஏ
447779 ஏ	147779 பி
147779 சி	147779 டி
147779 ஈ	147850 ஏ
147850 பி	147850 சி
148000 ஏ	148000 பி
148000 சி	148000 டி
148000 ஈ	148039 ஏ
148036 பி	148049 சி
148063 ஏ	148063 பி
148063 சி	148063 டி
148063 ஈ	148063 எவ்
148063 ஜீ	148146 ஏ
148146 பி	152599 ஏ
152600 ஏ	152601 ஏ
152601 பி	152681 ஏ
152720 ஏ	152742 ஏ
152826 ஏ	152832 ஏ

நல்லூர்

143168 ஏ	143168 பி
143168 சி	144446 ஏ
144446 பி	144620 ஏ
144620 பி	144620 சி
144630 ஏ	144630 பி
144630 சி	144630 டி
144643 ஏ	144643 பி
143942 ஏ	144114 ஏ
144170 ஏ	144170 பி
144170 சி	144170 டி
144175 ஏ	144175 பி
144182 ஏ	144182 பி
147307 ஏ	147307 பி

சண்டிலிப்பாய்

143842 ஏ	143842 பி
143933 ஏ	143969 ஏ
143969 பி	144012 ஏ
144012 பி	144012 சி

தெல்லிப்பழை

143950 ஏ	144065 ஏ
144065 பி	144071 ஏ
144071 பி	147125 ஏ
147125 பி	

உடுவில்

144036 ஏ	144052 ஏ
144052 பி	144052 சி
144052 டி	144124 ஏ
144124 பி	144124 சி
144132 ஏ	144137 ஏ
144137 பி	144137 சி
147071 ஏ	147071 பி
147071 சி	

(நா)

ஆங்கிலதினப் போட்டிகள்

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலய உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில மொழித்தினப் போட்டிகள் இம்மாதம் 12, 13ஆம் திகதிகளில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது; (உ-49)

தற்போதைய நடைமுறையில் தேர்தல்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை தற்போதுள்ள நடைமுறைகளுக்கமையவே நடத்தமுடியும் புதிய அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அமைய நடத்தமுடியாது.

இவ்வாறு அமைச்சர் பட்டி விரக்கோன் தெரிவித்தார்;

எதிர் வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

புதிய அரசியலமைப்பு யோசனைகளுக்கு அமைய பொதுத் தேர்தலை நடத்துவதனால் பல்வேறு அடிப்படைத் தேவைகளைப்பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது அதற்கு காலம் போதாது எனவே தற்போது உள்ள நடைமுறையின் திருமுறைகளுக்கு அமையவே பொதுத் தேர்தலை நடத்த வேண்டி இருக்கும்.

உத்தேச அரசியல் யாப்பு இம்மாதத்திற்குள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற பின் மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடப்படும் அதன் பின்பே அது நடைமுறைச் சட்டமாகும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்; (ச-வ)

வீதி திருத்தம்

(துன்னாலை)

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த கரவெட்டி மத்தி சம்பந்தர் கடையடி தச்சன் தோப்பு வீதி திருத்த வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளது; (உ-41)

தமிழ் ஆங்கில தட்டெழுத்து பயிற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத்தினால் நடத்தப்படும் தமிழ், ஆங்கில தட்டெழுத்து பயிற்சிநெறி எதிர்வரும் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது,

6 மாதகாலங்கள் ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ள இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர், இம் மாதம் 31ஆம் திகதிக்கிடையில் தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கலாம் என சம்மேளனத் தலைவர் என். செந்தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

(உ-75)

பொதுசன ... யாழ்ப்பாண நாவாந்துறைப் படிப்பகம்

புனர்வாழ்வுப் பணி இடைநிறுத்தம்

ஊழியர் பலரும் நிர்க்கதி நிலையில்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் ஆரம்பிக்கப்பட்ட, தீவக மீள் குடியேற்ற புனர்வாழ்வுக்காரியாலயம் தொடங்கப்பட்ட 6 மாதங்களிலேயே மூடப்பட்டுள்ளதனால் பெரும் இக்கட்டான நிலை எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டமீள் குடியேற்ற புனர்வாழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இக்காரியாலயத்தில் பணி புரிந்துவந்த 11 உத்தியோகத்தர்கள் வேலைகளை இழந்திருப்பதாக தெரியவருகிறது.

ஊர்காவற்றுறை வேலணை நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளினை மக்கள் பணி

கும்பாபிஷேக நிகழ்வும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம ஆலயத்தில் கும்பாபிஷேக தின நிகழ்வை ஒட்டிய விசேட அபிடேக ஆராதனைகளும் நூல்வெளியீடும் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று பிற்பகல் 2.00 மணியளவில் வெழ்ரி சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் தலைமையில் "சுப்ரஹ்மான யார்ச்சனம்" நூல் வெளியீடும்இடம்பெறவுள்ளது.

நூல்வெளியீட்டுரையை வெழ்ரி ச. சோமாஸ்கந்தக் குருக்கள் நிகழ்த்துவார். நிறப்புரை ப.வினாந்தசர்மா நிகழ்த்தவுள்ளார்.

வெழ்ரி கா. சாம்பசதாசிவக் குருக்கள் கௌரவிப்புரை பெற்றுக்கொள்வார்.

நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய பிரதமகுரு சிவழ்ரி கு. இயாகராசசர்மா பதில் உரை நிகழ்த்துவார்.

வெழ்ரி சா. சோமதேவக் குருக்களின் நன்றியுரையும் இடம்பெறும். (க)

சமாதான நீதிவான் நியமனம்



கேற்பு அனுமதி முறை மூலம் இணங்கண்டு தீர்த்து வைக்கும் முகமாக சென்ற வருடம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவும் (யு. என். டி. பி.) யாழ். செயலகமும் இணைந்து தீவக மீள்குடியேற்ற புனர்வாழ்வுக்காரியாலயத்தினை ஆரம்பித்துவைத்தபோதிலும் 6 மாதங்கள் மட்டுமே பணிகள் நடைபெற்ற நிலையில் காரியாலயம் கடந்த ஜனவரி மாதம் மூடப்பட்டுள்ளது.

இதனால் இனங்காணப்பட்ட மக்களின் தேவைகள்

உரும்பிராயில் மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவ ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற உள்ளது.

காலை 8. 00 மணிக்கும் 10. 00 மணிக்கும் இடையில் நடைபெறும் இந்நிகழ்வில் வெழ்ரி செ. வைரவநாதக் குருக்கள் உட்பட பல அந்தணப் பெருமக்கள் கலந்து கொள்வர்.

18 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் பி. பகல் 3. 00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறும்.

[க]

முழுமையாகத் தீர்க்கப்படாதுடன் உத்தியோகத்தர்களால் மேற் கொள்ளப்பட்டு வந்த திட்டங்களும் இடையில் கைவிடப்பட்டுள்ளது.

இடையில் கைவிட்ட திட்டங்களை மீள ஆரம்பித்தல் மற்றும் 11 உத்தியோகத்தர்களும் வேலை வழங்கல் ஆகியன தொடர்பாக யு. என். டி. பி. யின் யாழ் பிராந்திய அலுவலக பிரதிநிதியுடன் தொடர்பு கொண்டபோதிலும் இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சம்பந்தப்பட்டோர் கவலை தெரிவித்துள்ளனர். (உ-75)

பாவனையாளர் ஏமாற்றம்

கடந்த ஒருவார காலமாக ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பொதுமக்களுக்கு டீசல் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இப்பகுதி மக்களுக்கு டீசலை விநியோகம் செய்துவந்த ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கமானது பொருள் விற்பனை நிலையத்தில் ஒருவார காலமாக டீசல் விற்பனை செய்யப்படாததால் பாவனையாளர் பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக்காணக்கூடியதாகவுள்ளது. (உ-75)

உடுவில் வடக்கில்

தொடரும் திருட்டு, இரவுப் பொழுதை மக்கள் அச்சத்துடன் கழிக்கின்றனர்

(அரியரலை)

உடுவில் வடக்குப் பகுதியில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் உள்ள வீடொன்றின் பின்னால் ஒளிந்

மண்ணெண்ணெய் விலை வீழ்ச்சி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதி தனியார் வர்த்தகர்களால், 1 லீற்றர் 60 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த மண்ணெண்ணெய் விலை, தற்போது மிகவும் குறைவடைந்துள்ளது.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில், மக்கள் பாவனைக்கென பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதையடுத்தே இவ்விலை வீழ்ச்சி காணப்படுவதாகத் தெரிய வருகின்றது. (உ-27)

திருந்த திருடன் பின்சாரம் நின்றநேரம் வீட்டினுள்புக முயன்றவேளை வீட்டுக்காரர்கள் உசாராவதையடுத்து தப்பியோடி விட்டதாகவும்

உடுவில் வடக்கு ஸ்ரீசன்காவிதியில் உள்ள வீடொன்றில் கட்டப்பட்டிருந்த 7 ஆயிரம் ரூபா மதிக்கத்தக்க கடாவொன்றினை கடத்திச்செல்ல முற்பட்ட கள்வர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம் கள்வர்களின் கைவரிசை இப்பகுதிக்கோயில் கள்வரை நீண்டிருப்பதோடு அண்மையில் உடுவில் மதுவனைப்பிள்ளையார் ஆலய உண்டியல் உடைத்து பணம் திருடப்பட்டுள்ளது.

இவைபோன்ற சம்பவங்கள் இன்னும்பல தொடர்வதையடுத்து இப்பகுதிமக்கள் தமது இரவுப் பொழுதை மிகவும் எச்சரிக்கையுடன் கழித்துவருகின்றனர். (உ-106)

உள்ளிக்கு பெரும் தட்டுப்பாடு 200 ரூபாவரை விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ளிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகப் பாவனையாளர்கள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலம் வரை இலோ 160ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த உள்ளியின் விலை, திடீரென அதிகரித்து 200 ரூபாவரை கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதே சமயம், அவசரத் தேவைகளுக்கு கூட சில இடங்களில் உள்ளியைப்பெற முடியாது மக்கள் திண்டாடுவதையும் இதனைப் பெற்றுக் கொள்வதற்கென நீண்ட தூரம் அலைவதையும் அவதானிக்க முடிகிறது. (உ-27)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்

- தேர்தல் ஆணையாளர் உறுதி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தல்களின் போது, வடக்கு-கிழக்கில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்

அடுத்தமாதம் 24 ஆம்திகதியுடன் பாராளுமன்ற பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையில் எந்நேரம் நாம் தேர்தலை நடாத்த தயாராகவே உள்ளோம்.

தரவு கிடைத்ததும் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் வடக்கு கிழக்கில் சில இடங்களில் தேர்தல் நடத்தமுடியாத நிலை காணப்பட்டால் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைத்து தேர்தல்கள் நடாத்தப்படும்.

நாடுமுழுவதிலும் பத்தா

கொடிகாமம், கச்சாய் பகுதிகளில் பெருமளவு தேங்காய்கள் திருடப்படுகிறது

உரிமையாளர் கவலை

(புலோலி)

கொடிகாமம் பகுதியில்மருதடி, கச்சாய் வீதி, அல்லாரை ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களின்வீடுகளில்உள்ளதென்னை மரங்களில் உள்ள தேங்காய்களை திருடர்கள் திருடிச் செல்கின்றனர். இதனால் இத்தென்னைமரங்களின் உரிமையாளர்கள் பலத்த கவலையடைந்துள்ளனர். வீடுகளை விட்டு வெளியேறி வேறிடங்களில் தஞ்சமடைந்துள்ள இவ்வீடுகளின் உரிமையாளர்கள் வீடுகளைப் பார்க்கச் செல்லும் போதே இத் தேங்காய்த் திருட்டுச் சம்பவங்கள் தெரிய வருகின்றனவாம்.

இத் தேங்காய்த் திருடர்களில் சிலர் இனங்காணப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

தப்பியோடிய படையினரை கைதுசெய்ய பொதுமக்களின் உதவி கோரப்படுகிறது

(கொழும்பு)

மூப்படைகளிலுமிருந்து தப்பியோடிய இருபத்தையாயிரத்திற்கும் அதிகமான

செய்வதற்கு பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளது.

(க)

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தல்களின் போது, வடக்கு-கிழக்கில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்

அடுத்தமாதம் 24 ஆம்திகதியுடன் பாராளுமன்ற பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையில் எந்நேரம் நாம் தேர்தலை நடாத்த தயாராகவே உள்ளோம்.

அத்துடன் வாக்காளர் பதிவுப்புத்தகமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதியின் உத்தரவு கிடைத்ததும் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் வடக்கு கிழக்கில் சில இடங்களில் தேர்தல் நடத்த முடியாத நிலை காணப்பட்டால் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைத்து தேர்தல்கள் நடாத்தப்படும்.

நாடுமுழுவதிலும் பத்தாயிரம் வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

மாவை உற்சவத்தை ஒட்டி விசேட பஸ் சேவைகள்

போக்குவரத்து சபையினர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தினமும் யாழ். பஸ் நிலையத்திலிருந்து காலை 8. 00 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வரை ஒரு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாலை பூசைகள் முடிந்து பின்னர் 2. 45 மணிக்கு மாவிட்டபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஒரு சேவையும் நடாத்தப்படும்.


அடியார்கள் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் மேலதிக சேவைகள் நடாத்தப்படும். இதேவேளையில் அனேகமான வேண்டு கோளுக்கிணங்க அன்னமக்காவல் இடம்பெயர்வு காரணமாக பெரும்பாலான தென்மராட்சி மக்களின் நலன் கருதி கொடிகாமத்தில் ஒரு பேருந்தை இரவில் தங்க வைத்து தினமும் காலை 6. 30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து, நெல்லியடி ஊடாக யாழ். நோக்கி ஒரு சேவை 10 ஆம் திகதி முதல் நடாத்தப்படும்.

கொடிகாமத்திலிருந்து பஸ் புறப்படும் நேரம் 6. 30, 12 00 மணி. யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் நேரம் 9 15, 3.15 மணி.

யாழ்ப்பாணத்தில் இருந்து மீண்டும் நெல்லியடி ஊடாக கொடிகாமத்தைச் சென்றடையும்.

அதேவேளையில் கழிபுரம் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு சேவையும் மல்லாகத்திலிருந்து காரைநகர் நோக்கி ஒரு சேவையும் ஊடறுத்தபடியாக ஆரம்பிக்க உள்ளதாக வட-பிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

சமாதான நீதிவான் நியமனம்



(புலோலி)

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த திரு. அரியரத்தினம் வைகுந்தநாதன் நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்ப்பாண மாநகரசபையின் பாதுகாப்பு உத்தியோகத்தராகவும் சாரதியாகவும் பணியாற்றிய இவர் வலவெட்டித்துறை நகரசபையின் வருமான மேற்பார்வையாளராக்க் கடமையாற்றி வருகிறார். இறந்த சமய சமூகசேவையாளரான திரு. வைகுந்தநாதன் நெல்லியடி திரு இருதயக் கல்லூரியின் பழைய மாணவரும் துன்னாலை அரியரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் புத்திரருமாவார். (க-52)

கனை இருடர்கள் திருடிச் செல்கின்றனர். இதனால் இத்தென்னைமரங்களின் உரிமையாளர்கள் பலத்த கவலையடைந்துள்ளனர். வீடுகளை

இத் தேங்காய்த் திருடர்களில் சிலர் இனங்காணப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

தப்பியோடிய படையினரை கைதுசெய்ய பொதுமக்களின் உதவி கோரப்படுகிறது

(கொழும்பு)

முப்படைகளிலிருந்து தப்பியோடிய இருபத்தையாயிரத்திற்கும் அதிகமான படையினரை கைது செய்வதற்கு உதவுமாறு பொதுமக்களைப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கோரியுள்ளனர்.

இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளிலிருந்து தப்பியோடியோர் திரும்பவும் சேர்வதற்கு பல தடவைகள் பொது மன்னிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அவை கைகூடாத நிலையில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது அதுவும் சரிவராத கட்டத்தில் கைது செய்வதற்கு பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளது. (க)

எல்லைபடை வீரர் உயிரிழப்பு

(வவுனியா)

நாகர் கோயில் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோதலின் போது எல்லைப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவரின் விபரம் வருமாறு

● ஆனந்தன்

(பிலு ஆனந்தகுமார்)

உடையார்கட்டு. (ச-7)

பரு. ஆதார வைத்தியசாலைக்கு நாள் முழுவதும் நீர் வழங்க எம். எஸ். எவ். நிறுவனம் ஏற்பாடு

[மந்திகை]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இருபத்திநான்கு மணி நேரமும் நீரினை விநியோகிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாட்டினை எம். எஸ். எவ். நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகிறார்.

இதற்கான எம். எஸ். எவ். நிறுவனம் 24வது கொண்டு நீர் இறைக்கும் இயந்திரத்தினை அன்பளிப்புச் செய்துள்ளது.

இதனையடுத்து மருத்துவமனையிலிருந்த பாரிய தண்ணீர் தாங்கி மூலம் இருபத்திநான்குமணி நேரமும் நீர் விநியோகம் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் மருத்துவமனையில் நீரினை பெறுவதிலிருந்த சிரமம் நீங்குமென வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. (உ-23)

ஆசிரிய கலாசாலைக்கு அனுமதிபெற்ற பயிற்றப்படாத ஆசிரியர் விபரம்

பலாலி

விஞ்ஞானம்

செல்வி J. J பொனர்ண்டோ
செல்வி R. வினிதா
செல்வி N. கிரதி
செல்வி S. விஜயசிறி
செல்வி k. தாரணி
செல்வி S புஸ்பவதி
செல்வி R பிரபா
செல்வி S சிவானந்தி
செல்வி V. யோகமலர்
செல்வி N. சொர்ணாம்பிகை

மலர்

திரு . P. ஆரூரன்
திரு.V ஜெயமோகன்
செல்வி K. மதிவதனி
செல்வி K ஒளிவளர்மதி
செல்வி P.பத்மவேணி
செல்வி J.கமலாம்பிகை
செல்வி p.ராதா
செல்வி K சதிகலா
செல்வி T. கீதா
திரு. K நிருபன்
திருமதி S ஜோயிலினி

ஆங்கிலம்

செல்வி S.சுமந்திராதேவி
திரு R உதயசங்கரி
திரு A.ஹரிஞானராஜன்
திருமதி M.R செல்லமகள்
செல்வி M. அன்புசுலோசினி
திரு K.பாலகணேசன்
செல்வி S சத்தியலோசனி
செல்வி B. புவிராஜசிங்கம்
திரு S.தவராஜா
செல்வி.K.லோகேந்திரன்
சகோதரி S மேரிசாந்தி
வணக்கத்திற்குரிய சகோதரி A.C. மேரி டிலானி
திரு.S. முருகேஸ்
செல்விA. கமலாம்பிமை
திரு.T. சிறி கமலநாதன்
ரோமன் சத்தோலிக்கம்
திரு.S J A.N. லியோன்
செல்வி I.S விக்கிரமசிங்க

உடற்கல்வி

திரு R ராஜசீலன்
திரு.S விக்னேஸ்
திரு.P E A லெம்பர்ட்
திரு K J P லெம்பர்ட்
செல்வி.R.ஜெயந்தினி

வர்த்தகம்

திரு.M.C.S குறூஸ்
திருமதி Y சிவகுமாரன்
செல்வி K. தயானந்தி
திரு.A.குணசிலன்

செல்வி A.A.S. றிபாயா
செல்வி T.திருவாளர்செல்வி
திரு T புவனேஸ்வரன்
திரு.S N பெர்ணாண்டோ
திருமதி Y இன்பகரன்

வர்த்தகம்

திரு. R நவகேதீஸ்வரன்
திரு C D தயாளஜெகன்
திரு. R பிரத்தாபன்
செல்வி S மலர்விழி
செல்வி N மேரிஅஞ்சலா
திரு. M சிறீதரன்
செல்வி R. கவிதா
திரு S. சிவனொளிச்செல்வன்
திரு T ஜெயதாஸ்
செல்வி M. கலைமகள்
செல்வி P. சிவப்பிரியா
திரு. V. முருகதாஸ்
செல்வி S. கமலதர்சினி
செல்வி K. ஞானசக்தி
செல்வி K. பிரியதர்சினி
செல்வி B நர்மதா
செல்வி C. பிரசாந்தி
செல்வி A. தயாளினி
செல்வி K. கௌரிபாலனி
திரு. A.J. ஜெயகுமார்
செல்வி A. சந்திரவதனி
திரு. T. பகீரதன்
திரு. A. சத்தியானந்தம்
செல்வி P. தனேஸ்வரி
திரு. P. ராமகிருஷ்ணா
செல்வி S ராஜினி
திரு. S. சிவகுமார்
செல்வி K. நளாயினி
செல்வி P. சுதர்மதி
திருமதி S. ரஞ்சினிதேவி
திரு. T. அபராஜிதன்
திரு. N. பாலச்சந்திரன்
திரு. P. ரஞ்சன்
திருமதி P. தமிழ்ச்செல்வன்

கணிதம்

செல்வி G. பற்றீசியா
திரு. T. மோகன்
செல்வி S. சுஜாதா
திரு. K லோகேஸ்வரன்
திரு. M. லோகநாதன்
திரு. T. பாலச்சந்திரன்
செல்வி S நளினி
செல்வி T. தயாநிதி
திரு. S. சிறீரங்கநேசன்
திரு. N கிருஷ்ணகுமாரி
திரு J கோகிலவாசன்
செல்வி S. உமாதேவி
திரு. R டீரதன்

சீன- அமெரிக்க பேச்சுக்கள் முடிவு

அமைச்சர்கள் சந்திப்பு தொடரும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையே நடை பெற்ற ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதப்பரவல் தடைகுறித்த இரண்டு நாள் பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்துள்ளன. இரு நாடுகளும் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்புகள் இருப்பதாகவும் இது குறித்து பல்வேறு நாடுகளுடனும் அமெரிக்கா கலந்து அலோசித்து வருவதாகவும் அமெரிக்க

ரஷ்ய பொருளாதாரம் கீழ்நிலை;

புதிய முதலீடுகளுக்கு வரவேற்பு

அதிபர் புட்டின் உரை

(மாஸ்கோ)

ரஷ்யாவின் பொருளாதாரம் மிகக்கீழ் நிலையை அடைந்துள்ளது. என்று புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ரஷ்ய தலைவர் விளாடிமிர் புட்டின் தெரிவித்தார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபின் முதல் முறையாக இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில், ரஷ்யாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் முத



லீடுகள் வரவழைக்கப்பட்டு புதியதொரு அரசியல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் குடிசனத் தொகை குறைந்து வருவதாகவும், பிராந்திய தலைவர்களின் அதிகாரங்கள் கட்டுப் படுத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்த அவர் செச்சினியாவுடனான ரஷ்யாவின் பகைமை நிலையால் ரஷ்யாவின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்கு வந்துள்ளமை பற்றியும் ஜனாதிபதி புட்டின் இருசபைகளின் கூட்டுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (து)

அமெரிக்க ஏவுகணை சோதனை தோல்வி

ரஷ்ய தளபதிகள் அதிருப்தி வெளியீடு

(மொஸ்கோ)

அமெரிக்க ஏவுகணை சோதனை பயனளிக்காமல் போயிருப்பதானது அந்நாட்டால் தொடக்கப்படடிருக்கும் ஏவுகணை எதிர்ப்பு கட்டமைப்பு செயற்படுத்த முடியாதிருப்பதையே காட்டுவதாக ரஷ்ய படைத் தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற கட்டமைப்பு அமெரிக்காவின் பாதுகாப்புக்கு உதவாது என்றும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்க தரப்பு தெரிவிக்கையில், மூன்று ஏவுகணைப் பரிசோதனைகள் அமெரிக்காவால் நடாத்தப்பட்டன என்றும் அவற்றுள் இரண்டு தோல்வியில் முடிவடைந்தன என்றும் தொழில்நுட்ப திருத்தங்களுடன் அவை வெற்றியை நோக்கி நகர்த்த முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (க-து)

உலக வறிய நாடுகளுக்கு உதவிட

ஐரோப்பிய ஒன்றியம் தயார்

(லண்டன்)

ஐரோப்பியஒன்றியம்உலகில் கடன் சுமைகளினால் பாதிக்கப்படும் வறிய நாடுகளுக்கு நிவாரணம் அளிக்கும் முகமாக 95 கோடி டொலருக்கும் அதிகமான உதவி வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது.

இதன் தொடர்பான ஒப்பந்தத்தில் கடன் நிவாரணப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் ஆணையாளர் போட் நில்சன் கைச்சாத்திட்டுள்ளார்.

ஆபிரிக்காவிலிருந்து பசிபிக்கரிபியன் நாடுகள் இதனால் நன்மை அடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில், மற்றுமொரு தொகுதி உதவிலத்தீன் அமெரிக்கநாடுகள், கிழக்காசிய நாடுகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க து)

பாக். முன்னாள் பிரதமரின் துணைவியார்

பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

விரட்டிச் சென்றே பிடித்தனராம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஷெரிப்பின் துணைவியார் குல்சும் நவாசை பொலிசார் கைது செய்துள்ளனர்.

வீட்டுக் காவலில் இருந்த திருமதி குல்சும் தாம் நடத்த இருக்கும் அடுத்த நாள் பேரணிக்காக பலத்த பொலிஸ் காவல்களையும் மீறி தப்பிச் சென்று கொண்டிருக்கையில் பொலிஸார் அவரை விரட்டிச் சென்று கைது செய்ததாக இஸ்லாமபாத் செய்திகள் தெரிவித்துள்ளது. (க)

இந்தியா வரவேற்கிறது

(புதுடில்லி)

பூட்டானிலிருந்து செயல்படும் அல்பா மற்றும் போடோ தீவிர வாதக்குழுக்களின் நடவடிக்கைகளை ஒடுக்க ஒத்துழைப்பது என்று

ஆயுதப்பரவல் தடைகுறித்த இரண்டு நாள் பேச்சுவார்த்தை நேற்று முடிவுக்கு வந்தது.

ஆயினும் பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டத்திற்கு சீனா உதவி வருவது பற்றிய கருத்து வேறுபாடுகளை இரு நாடுகளும்தவறி விட்டதாகத்தெரியவருகிறது.

நவீன தொழில்நுட்ப வசதி பெற்றுள்ள எல்லா நாடுக

அமெரிக்கா கலந்து அலோசித்து வருவதாவும் அமெரிக்க ஆயுதக்கட்டுப்பாட்டாளர் ஜோன் போல் தெரிவித்துள்ளார்.

எனினும் அடுத்த வாரம் பீஜிங் செல்லும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் கோகே ஆயுதக்கட்டுப் பாடுகுறித்த பேச்சுவார்த்தை நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

குவைத் நாட்டில் தஞ்சம் புகுவோரில் இலங்கையர் ஐந்தாவது இடம்

புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு

(குவைத்)

குவைத் நாட்டில் தஞ்சம் அடைவோர் தொகையில் இலங்கையர் ஐந்தாவது இடத்தை வகிப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மத்தியகிழக்கு நாடுகளிற்கு வேலை வாய்ப்பு நாடிச் செல்வோரில் பலர் குவைத்திற்கு செல்வதுடன் பலர் அங்கேயே

நிரந்தரமாக தங்குவதற்கான வதிவிட அனுமதியையுப் பெற்று விடுவதாக அறியப்படுகிறது.

இதேவேளையில் தற்போது குவைத்தின் ஏற்பட்டுள்ள நெருக்கடி அரசியல் சூழ்நிலை போன்றஇன்னேரன்ன காரணிகளால் தஞ்சம் புகுவோரின் தொகை வெகுவாக குறைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு அரசியல் தஞ்சம் புகுவோரில் யூகோசிலாவிய நாட்டினர் முன்னணியை வகிக்கின்றனர் இரண்டாவது இடத்தில் துருக்கி நாட்டினர் வகிப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது; (க-து)

கோயில் புனரமைப்பு

(மல்லாகம்)

சுன்னாகம், சபாபதிப் பிள்ளை வீதியிலமைந்துள்ள விளாத்தியடி அம்மன் கோயில் புனருதாரணம் செய்யப்பட்டு வருகிறது; (உ-14)

ஒரே சீனம் என்ற கொள்கைக்கு உகண்டா என்றும் ஆதரவு

தலைவர் முகவேர்ரி தெரிவிப்பு

ஒரேசீனம் என்ற கொள்கையில் ஊன்றிநின்று சீனாவின் ஒன்றிணைப்புப் பணிக்கு ஆதரவுஅளிக்க உகண்டா தயார்என, அந்நாட்டுஅதிபர் முகவேர்ரி நேற்றுத் தெரிவித்தார்.

சீன கம்யூனிஸ் கட்சியின் செயலாளருடன் உரையாடிய போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இருநாடுகளுக்கிடையிலான நட்புறவை வளர்க்கும்வேளையில் பொருளாதார தொழில் துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (து க)

பனாமா தலைவரின்தாய்வான் விஜயம் சீன உள்விவகாரத்தில் தலையிடுகிறது

ஜனநாயகக் கட்சி குற்றச்சாட்டு

(பனாமா)

பனாமாவின் அரசுத் தலைவர் மூர்க்கோசு அம்மையார் அண்மையில் தாய்வானிற்கு மேற்கொண்ட விஜயமானது சீனாவின் உளவிவகாரங்களில் தலையிடுவதாக அமைவதாக பனாமாவில் உள்ள ஜனநாயக கட்சி தெரிவித்துள்ளது.

தாய்வான் இன்று தனி ஒரு அரசாகக் கொள்ளப் பட்டாலும் கூட சீனாவின் ஆதிபத்தியத்துக்குள் ளேயே பனாமா இன்றும் உள்ளதாக அக்கட்சி இன்னமும் நம்புகிறது.

இதேவேளையில் பனாமா தலைவர் மூர்க்கோசு அம்மையார் கடந்தவாரம் தாய்வானிற்கு விஜயம் மேற்கொண்டதுடன் அந்நாட்டு தலைவர்களுடனான கூட்டு ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (க-து)

கணின் நடவடிக்கைகளை ஒடுக்க ஒத்துழைப்பது என்று அந்நாடு. மேற்கொண்டுள்ள முடிவை இந்தியா வரவேற்றுள்ளது.

பூட்டானின் தேசிய சட்டப் பேரவை நிறை வேற்றிய இத்திர்மானத்தை இந்தியா வரவேற்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார்.

(து)

குடிநீர் பெறுவதில் சிரமம்

(துன்னாலை)

இடம் பெயர்ந்து கரவெட்டிப் பகுதியில் தங்கியுள்ளமக்களால் அதிகம் பாவிக்கப் பட்டு வரும் அத்துளு அம்மன் ஆலய குடிதண்ணீர் இணறு அதிக பாவனை காரணமாக விரைவில் நீர்வற்றிவிடுகிறது;

இதனால் மேற்படி பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் மிகுந்த பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்;

அத்துடன் தமது நிலையை கருத்திற் கொண்டு பொது நிறுவனங்கள் தமக்கு உதவி புரிய முன்வர வேண்டும் என வும் கோரிக்கை விடுத்துள்ளனர்; (உ-14)

கண்ணோட்டம் என்னும்
கழிபெருங்காரிகை
உண்மையான் உண்டிவ்வுலகு
- குறள்

வலம்புரி

பிசகும் பிரயாணம்!

எங்கள்மக்கள் பிரயாணத்துக்காய் படுகின்ற பாடு நாய் படாப்பாடு. பிரயாண அனுமதி பெற மாதக் கணக்கில் முன்பு காத்திருக்க வேண்டியிருந்தது. அந்நிலை சீர் செய்யப்பட்டு காலம் குறுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அனுமதியின்பின் பிரயாணக்கப்பல் சீட்டுப் பெற ஆலாய்ப்பறக்கும் மக்கள் துயரம் சொல்லில் அடங்கா. எல்லோரும் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் அல்லர். இயுவரிசையில் முன்னிடம் பிடிக்க சாப்பாட்டுப் பொதியோடு முதல் நாளே சுற்றத்தார் வீடுகளில் தங்கும் நிலை. காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கால்கடுக்கத் தூங்கியும் பயனில்லாத துன்பநிலை.

இங்கே பிரயாணம் செய்பவர்கள், மண விலனக்கு, கல்விக்கு, வெளிநாட்டுப் பயணத்திற்கு, மரண வீட்டிற்கு, வியாபாரநோக்கிற்குஎன பல்வேறு வேறுபட்ட நோக்குடையவர்கள். அந்த நோக்கங்களை வகைப்படுத்தி முன்னுரிமை வழங்கமுயல்கிறது சிவில் அலுவலகம். பாராட்டலாம். ஆனால் முற்றுப் பெறாத நிலையில் வழி பிதுங்கி வெதும்பி அழிபவர்கள் ஏராளம்.

இங்கே மனித உரிமை மறுக்கப்படுவதும், வயோதிப வயதினர், நோய்வாய்ப்பட்டோர் இயுவரிசையில் இலவு காத்த கிளியாய் ஏம்பலிப்பதும் வேதனைக்குரிய விடயம். பயணச் சீட்டின் விலையை நிர்ணயிக்கப்பட்ட பாடு மக்கள் அறிந்ததே. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட விலைபோல் மூன்று நாலு மடங்கு செலுத்தினால் இடைத்தரகர்களிடம் இலகுவில் பெறலாம்எனப்பேசப்படுகிறது. இதுவும்ஒரு சாபக்கேடா?. வருவாய்க்கு வழிசமைப்பதா?.

யாழ். மண்ணில்இருந்து தரைப்பாதை ஒன்று தடையின்றி இருந்தால் நடந்து சலிப்பதை விட போக வேண்டிய இடங்களுக்கு நடந்து பல முறைபோய்த் திரும்பலாம் என மனம் புளுங்குகிறார்கள்.

நெறிப்படுத்தும் சிவில் அலுவலகம் பயண அனுமதிக்காலம், பயணத்தின் நோக்கம் என்பவற்றைக் கருத்திலே கொண்டு ஆயிரக் கணக்கில் மக்களை அலைமோத விடாது பயணச்சீட்டு அனுமதி இலக்கங்களை பத்திரிகையில் விளம்பரப்படுத்தினால் பெருமளவு தொல்லை தவிர்க்கப்படும்.

- அன்புடன் ஆசிரியர்

மனித அணுகுமுறைகளில் ஏற்படும் தவறுகளே

உலகின் துன்ப துயரங்களுக்கு காரணம்

21ம் நூற்றாண்டு, நவீனயுகம், நாகரிகவளர்ச்சி அறிவுப்பண்பாட்டு உயர்வுகள் என்றெல்லாம் மேலோங்கி நிற்பதாகக் கருதப்படும் இன்றைய காலப்போக்கில் எங்குபார்க்கினும் அமைதியின்மையும், சண்டையும், சச்சரவும், குழப்பங்களும், போட்டி, பொறாமைகளும் மனிதநிந்தனைகளின் ஒழுங்கற்ற செயற்பாடுகளும் மலிந்து ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட வாழ்க்கைமுதல் நாடளாவியரீதியில் சந்தர்ப்பவாத அணுகுமுறைகளால் ஸ்திரமற்ற, களங்கம்மிக்க விளைவுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இந்நிலை மாறினங்கும், எதிலும் நல்எதிர்பார்ப்புகளும், நன்மையான விளைவுகளும் ஏற்படவும், நிலைக்கவும் உலகில் எதிலும் சரியான, தூய, மதிநுட்பமிக்க அணுகுமுறைகள் அவசியம் என்பதனையே இக்கட்டுரை சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மக்களுடைய வாழ்வில் இன்றியமையாத வழிகளாயினும் முன்நின்று கைகொடுப்பது அவரவர்களின் அணுகுமுறைகளாகும்.

அணு என்பது எவ்வளவு நுண்ணியதாகக் கருதப்படுகின்றதோ அவ்வளவு நுண்ணிய ஆற்றல் மிக்கது இந்த அணுகுமுறையுமாகும். ஆண்டவனே முதல் ஆண்டி வரை யாவர்க்கும், யாவதிறினும் அணுகுமுறை என்பது மிகவும் வல்லமைமிக்கதொன்றாகும்.

உதாரணமாக இறைவனை வழிபடுதலிலும் ஒவ்வோர் சமயத்தவரும் இறைவனை மனத்திருத்தி அவ்வவ் மதக் கோட்பாட்டு நம்பிக்கைகளிலும் நல்வழிகாட்டலிலும் ஏற்ற உரிய அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தலிலே இறையருளும், மனதில் அமைதியும் உயர்வும் அடையமுடிகின்றது.

பிழையான அணுகுமுறைகளால் பெருந்துன்பமும், போராட்டமும் சீரழிவுகளுமே சமுதாயத்தில் மேலோங்கி நிற்கின்றன. சின்னஞ்சிறு குழந்தைகளின் வளர்ப்பு, வழிகாட்டல் முதல் பேரறிஞர்களின் பெருந் தத்துவங்களுக்கும் நாடாள்வோர் முதல் நாட்டின் ஒவ்வோர் பிரஜைவரை யாவர்க்கும் சரியான அணுகுமுறை இன்மையாலே எவ்வளவு பெரும் இழப்புகளும், துன்பங்களும், சோதனைகளும் ஏற்படுகின்றன.

இன்றைய உலகியல் நிலவாரங்கள் யாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து சிந்திப்போமானால்சரியான அவ்வப்போது அதற்கதற்கேற்ற நல்ல அணுகுமுறைகள் கடைப்பிடிகப்படாமையால் ஏற்பட்டுள்ள கொந்தழிப்புக்களும், குமுறல்களும் பல்வேறு கஷ்டநஷ்டங்களும்சோதனைகளும் எம்மை சிந்திக்க வைப்பனவாயுள்ளன.

நாம் எடுத்துவைக்கும் ஒவ்வோர் காலடியிலும், நமது அணுகுமுறையைப் பொறுத்தே சாதக பாதகங்களைத் தருகின்றது. வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள் துன்பங்கட்கெல்லாம் பிழையான எமது அணுகுமுறை காரணமாக இருப்பது போல, எமக்கு வரும் வாழ்க்கையின் வெற்றிகளுக்கும் உயர்வுகளுக்கும், பெருமகிழ்ச்சிகளுக்கும் அவ்வப்போதைய எமது சரியான அணுகுமுறைகளே மூலகாரணமாயமைகின்றன.

சரியான அணுகுமுறைகளைக் கைக்கொள்வதற்கு எமக்கு நிதானசிந்தையும், பொறுமையும், இடமானமனதும், நுட்பமான அறிவும் சரியான இடம், பொருள், ஏவல்களும் அமைய வேண்டியது அவசியம். இவை பல வினமடையும் போதும், நாம் விழிப்புணர்வின்றிச்செயலாற்றும் போதும் ஏற்படும் நிலையே எமக்குப் பிழையான அணுகுமுறைகளாக அமைகின்றன.

இன்றைய நம் நாட்டின் முதற் பிரச்சினையான இனப் பிரச்சினை முதல் சகல பிரச்சினைகளுமே பிழையான அணுகுமுறைகளால் ஏற்பட்டவை என்பது தெளிவாகும். அற்ப பதவி ஆசைகளும், சுயநலமும், குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெறும் நோக்கமும்தேசப்பற்றின்மையும், போலிக்கௌரவங்களும் மக்களை ஆட்கொள்வதால் ஏற்படும் பிழையான அணுகுமுறைகள் தனிமனிதன் முதல் நாட்டு மக்கள் வரை முழுமையாகவே இன்னல் கட்கு ஆளாக வழிசமைத்து விடுகின்றது.

எதற்கும் எவ்விடத்தும்ஏற்ற படியான அணுகுமுறைகளை நன்கு தெரிந்திருப்போமாகட, அற்ப சிந்தனைபாசைகளாலும் அச்ச உணர்வுகளாலும், இன்னும் பலவேறு காரணங்களாலும், வழிதடுமாறி நடப்பது தெளிவாகின்றது.

ஆண்டவனை அணுகிவழிபடும் முறையிலேயே பக்தர்களுக்கு சரியான மார்க்கம் இருக்கவேண்டும் என்பதுஉன்னிடமான கருத்தாகும். எனில் மற்றைய உலகியல் வாழ்விற்கான செயற்பாடுகளின் அணுகுமுறைகளிற்தான் ஏற்பட்டால்வரக்கூடிய அல்லல்கள் எத்துணை தாக்கங்களைமக்கட்கு ஏற்படுத்தும் என்பதனை நன்கு சிந்தித்து

நீர்வை மணி

நித்துசெயற்படுவோமாயின் நாமும் நல் வாழ்வு வாழ்வதுடன்நாடும் நல் வளம் பெறும் என்பதைச்சிந்தையில்இருத்துவோமாக.

பிழையான அணுமுறைகளால்ஏற்படும் துன்பங்களைக்காலங்கடந்து சிந்தித்துத் துன்பப்படுவதிலும் பார்க்க, தனக்கும், பிறர்க்கும் துன்பமில்லாத விதத்தில் எதனையும் அணுகும் நன்மனதை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வோமாயின் எவ்வளவோதுன்பங்களையும், சிரமங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

நாட்டிற்கு நல்ல கூறிய நம் சான்றோர்காட்டிய உண்மைநெறியில், நேர்மையான பாதையில் எதனையும்அணுகுவோமாயின் உலகமே உயர்வடையும் என்பதை மனதில்இருத்தி எதனையும் நாம் அணுகுவோமாக.

கோப்பாயில் விவசாயிகள் மத்தியில்

கருத்து வேறுபாடுகள் வலுக்கிறது

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு மற்றும் மத்தியபகுதியை சேர்ந்த விவசாய சம்மேளனங்களுக்கிடையே நிலவிய கருத்துவேறுபாடுகள் தற்போது உச்ச நிலையை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம்பற்றி மேலும் தெரியவருவதாவது:

சமரசம் செய்ய வேண்டுகோள்

கோப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளனம் முதலில் ஆரம்பிக்கப்பட்ட, வேளையில் கோப்பாய் மத்தி விவசாயிகளும் அங்கத்துவர்களாக அதில் இணைந்து கொண்டனர்.

இராம சேவையாளர்களே இச்சம்மேளனங்களில் பொறுப்பாக இருக்கவேண்டுமென்ற சுற்றுநிருபத்துக்கமைவாக கோப்பாய் மத்தி இராம சேவையாளர் பிரிவுக்கான விவசாயிகள் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் வடக்கு சம்மேளனம் அதன் அண்மையிலுள்ள மத்தி சம்மேளன அங்கத்தவர்களின் அங்கத்துவப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க சம்மதம் தெரிவிக்கவில்லை.

எனவே இரண்டு சம்மேளன நிர்வாகிகளும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மத்தியைச் சேர்ந்த ஐம்பது வரையான விவசாய அங்கத்தவர்கள் கூட்டாக இணைந்து வடக்கு சம்மேளனத்தில் இணைவதற்கான துரித நடவடிக்கையிலீடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயத்தில் இருபகுதி கிராமசேவையாளர்களும் தத்தமது பகுதியைச் சாராத விவசாய குடியிருப்பாளர்களை அங்கத்தவர்களாக சேர்க்க வேண்டாமெனக் கூறியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இது விடயம் உரியவர்களுக்கு முறையாக அறிவித்து ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் இத்தகைய கசப்புணர்வுகள் இல்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியாது என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விவகாரத்தில் தலையிட்டு சமரச நிலையை இருபகுதியினர் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டுமென சமூக நலன்விரும்பிகள் எதிர்பார்ப்பதாகவும் கூறிக்காட்டப்படுகிறது.

(க - 79)

புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்

(கரணவாய்)

யா/இமையாணன்அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்விப் பிரிவால் ஆரம்பிக்கப்படவுள்ள எழுத்தறிவூட்டல், உடையலங்கராரம், தையல்பயிற்சி ஆயுடயிற்சி நெறிகளில் பங்கு கொள்ளவிரும்புவோர், போட சாலை நேரத்தில் மேற்படி பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[உ-27]

விடுதலைப்புலிகளை இணைக்காத எந்தஒரு தீர்வுமுயற்சியும் நிலத்தில் வேர்ஊன்றாத மரத்திற்கு சமம்

- ஜோசப் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை இணைக்காத எந்தஒரு தீர்வு முயற்சியும் நிலத்தில் வேர் ஊன்றாத மரத்திற்கு ஒப்பானதென மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுசனஐக்கியமுன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச அரசியலமைப்பு நகல்திட்டம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர்தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கைத்தமிழர்களின் 50 வருடகால அரசியல் வரலாற்றில் அவர்களின் உரிமைகளுக்காக 30 வருடங்கள் அகிம்சை வழியிலும் 20 வருடங்கள் ஆயுதவழியிலும் போராட்டங்கள் நடாத்தியுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் அரசு தற்போது முன்வைத்துள்ள அரைகுறைத்தீர்வை ஏற்க தமிழ் மக்கள் முன்வரமாட்டார்கள்.

அவரிமேலும் தெரிவிக்கையில், நிப்புக் கோட்பாட்டின் அடிப்படையின்கீழ் எமது பிரச்சினைக்குத்தீர்வு காணப்படவேண்டும் என்றார்.

தமிழர் விடுதலைக்கூட்டணிஉட்பட முக்கிய தமிழர் கட்சிகள்பலவும் குறிப்பிட்ட நகல் திட்டம்குறித்து தீவிர அக்கறைகாட்டாமல் இருந்து வருவதுக் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-உ)

குழாய்க் கிணறு அமைக்கும் பணி ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நேற்று ஆரம்பமாகியுள்ளது.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வல்லிபுரம் கமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

குழாய்க் கிணறு அமைக்கும் பணி ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நேற்று ஆரம்பமாகியுள்ளது.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வல்லிபுரம் கமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

குழுநிலைப் படகு உதிரிப்பாகம் வந்தது

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களாக பழுதடைந்த நிலையிலிருந்த குழுநிலைப் படகைத் திருத்துவதற்குத் தேவையான உதிரிப் பாகத்தை கொழும்பிலிருந்து ஈ.பி.டி.பி கிளர்எடுத்துவந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

திருத்த வேலைமுடிவடைந்தவுடன் கிரமத்தில் குழுநிலைப் படகு சேவையில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

விளையாட்டுச் செய்திகள்

இலங்கை அணி வெற்றி

(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே கொழும்பு பிரேமதாஸா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ''சிங்கர்'' கிண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 6 விக்கற்றுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் 6 விக்கற இழப்புக்கு 240 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில்4விக்கற்இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதனால் ''சிங்கர்'' கிண்ண இறுதியாட்டத்திற்கு இலங்கை அணி தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(4)

சிங்கர் கிண்ண நேற்றைய ஆட்டத்தில் 'வக்கா யூனிஸ்' நீக்கப்பட்டார்

(இலங்கை)

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் வக்கா யூனிஸ், 'சிங்கர்' கிண்ணத்துக்கான முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்று மூன்றினம் நடைபெற்ற ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் 'கிரிக்கெட் பந்தின் தையலை அவிழ்த்தமையே'' இதற்குக் காரணமாகும்.

தொலைக்காட்சி மூலம் கண்டறியப்பட்ட இதே குற்றச்சாட்டிற்காக அணியின் சகவீரரான 'அசார் மகமூட்' எனபவரும் தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ச-4)

தப்பியோடிய 2,000 இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சுமார் இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக இணைந்து நடத்திய தேடுதலின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேடுதல் நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் எனவும், இந்த தீர்க்கமான தருணத்தில் பயிற்சி பெற்ற படையினர் அனைவரும் திரும்பி வந்து இராணுவத்தில் இணைவது அவசியம் எனவும் பிரிகேடியர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-4)

புலி உறுப்பினர் உயிராழப்பு

(வவுனியா)

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலின் போது ★ 2 ஆம் லெப் கவிஅரசி/ எழினி (மனுவேற்பிள்ளை ரணிஸ் மரியசீலி) யாழ்ப்பாணம் என்பவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி...

அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவதாக சிங்கள மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவைப் பெற்றிருக்கும் ஜே.வி.பி.கட்சியினரின் எதிர்ப்புக் கோஷங்களுக்கு மத்தியிலும் ஜனாதிபதி சந்திரிகா இன்று தமிழ்க் கட்சிகளை அலரி மாளிகையில் சந்திக்கிறார்.

இதேவேளை அதிகாரப்பரவலாக்கல் தீர்வு அடங்கிய யோசனைகளை நோர்வே அரசு மூலமாக லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியிலும் அரசு ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாக எமது கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(வ)

ஐ தே. கட்சி...

பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்ட மூலத்தை நிறை வேற்றுவதில் எதுவித சிக்கலும் இருக்க மாட்டாது என்றும் எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசே வெற்றி பெறும்என்றும் தெரிவித்தார்.

இதேவேளை றொனி டி மெல் நேற்று முன்தினம் லண்டன் புறப்பட்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

அரசாங்கத்துடன் தமிழ்க்கட்சிகள் பேச்சு நடத்த முன்வரவேண்டும்

அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட அதிகாரப்பரவலாக்கலை தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொண்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று அமைச்சர் எம். எச். எம்' அஷ்ரப் தமிழ்க்கட்சிகளை கேட்டுள்ளார்.

அரசும் ஐ. தே. கட்சியும் இணக்கம் காணப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக அமைச்சர் அஷ்ரப் மேலும் கருத்து வெளியிடுகையில், அரசும்-ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம்காணப்பட்ட விடயங்கள் இலங்கை அரசமைப்புத்திட்டத்தின் 13வது திருத்தச்சட்டத்தை விட கூடிய அதிகாரங்களைக் கொண்டுள்ளதுடன் 14வது திருத்தச்சட்டத்தினை நீக்கக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

இதனால் அரசும், ஐ. தே. கட்சியும் இணக்கம்காணப்பட்ட விடயங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார்.

(வ)

அதிகாரப்...

சியில செய்தியாளர்களிடம் பேசிய ஆர். நல்லகண்ணு மேலும் தெரிவித்திருப்பதாவது.

இலங்கை அரசு முன்வைக்க வுள்ள அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் அழைக்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தையும், பாட்டாளி மக்கள் கட்சியையும் சடை செய்வதை விடுத்து அவற்றை மக்கள் மத்தியில் இருந்து தனிமைப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

[வ]

பயணிகள்...

ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை 7மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். புகையிரத நிலையத்துக்கு வருமாறு யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

அரசு...

கது என்று தொழிற்சங்கத் தலைவர்கள் பாராட்டியுள்ளனர்.

இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் கருத்து வெளியிடுகையில் மனித உயிர்கள் வீணாக அழிவதைத் தடுக்க இருதரப்பினரதும் முயற்சிப் பயனளிக்கும் என்றும் இதற்கு சங்கத்தின் ஒத்துழைப்பு இருக்குமென்றும் தெரிவித்தார்.

அரசாங்க லிகிதர் சங்கத்தின் தலைவர் குணசேனமகா நாம கருத்து தெரிவிக்கையில்;

இலங்கையில் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் மாத்திரமன்றி விடுதலைப்புலிகளும் ஏனைய கட்சிகளும் இதற்கு இணக்கம் தெரிவித்திருப்பது அவசியம் என்று கூறியுள்ளார்.

இலங்கை அரச துறை தொழிற்சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்கம் ஆகியனவும் ஆதரித்துக் கருத்து வெளியிட்டுள்ளன.

(வ)

சுதுமலை அம்மன் ஆலய மின்பிறப்பாக்கி திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை சிறிபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் கூரை பிரிக்கப்பட்டு சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கி ஒன்று கடந்த வாரம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டைக் கண்டுபிடிக்க பொலிசாரும் ஆலய நிர்வாகத்தினரும் தீவிரதேடுதல் நடத்தியபோதும் இன்று வரை திருட்டின் மர்மம் துலங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

றொனி டி மெலுக்கு அமைச்சர் பதவி?

[கொழும்பு]

கைத்தொழில அபிவிருத்தி அமைச்சராக றொனிடிமெல் நியமிக்கப்படலாம் என்று கொழும்பில் அரச வட்டாரங்கள தெரிவித்தன.

றொனிடிமெல் விடுமுறையில் 10 தினங்கள் லண்டன் சென்றிருப்பதால் அவர் நாடு திரும்பியதும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக் சத்தியப்பிரமாணம் செய்வார் எனஎதிர் பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்தினா குண்டு வெடிப்பில் கொலலப்பட்டது தெரிந்ததே.

(வ)

நவாலிப்...

நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் ஜெயசீலன் அடிகளாரினால் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம் பெறறது.

இந நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் அனைவரும் கண்ணீர் மல்க தம் உறவுகளின்ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இப்படுகொலை தொடர்பாக வன்னிப் பெருநிலப்பரப்பிலும் நினைவுநிகழ்வுகளும் ஆராதணைகளும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச.7)

அரசாங்கத்தை...

மேலும் தெரிவிக்கையில் பேச்சுவார்த்தைக்கான அமைப்பும் தீர்வுப் பொதியும் நேற்று எமக்கு கிடைத்த போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாகவே அரசுடன் பேச்சுவார்த்தை செய்வது என்று மத்திய குழுஏற்கனவே தீர்மானித்திருப்பதனால் ஜனாதிபதியை தனியாகவே கூட்டணி சந்திக்க விரும்புகிறது என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் திருமலை மாவட்ட எம்.பியுமான இரா. சம்பந்தன் இன்று காலை கொழும்பு திரும்பியதும் மத்தியகுழுக் கூட்டப்பட்டு ஜனாதிபதியை சந்திப்பது தொடர்பாக தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இரா.சம்பந்தன் லண்டனில் தங்கியிருந்த போது விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களை சந்தித்து பேச்சு நடத்துவதாகவும் மற்றொரு கோழும்புச் செய்திதெரிவித்துள்ளது.

(வ)

சுரேஷ் அணியில் ஒருவர் காயம்

(கொழும்பு)

மன்னாரில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் வரதர் அணியைச் சேர்ந்த ஒருவர் சுட்டதில் சுரேஷ் அணியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுரேஸ் அணியைச் சேர்ந்த ஜெயபால் என்பவரே தலையில் காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

[வ]

இன்றுமுதல்...

படுகிறது.

கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகுறைப்பு தொடர்பாக கடந்த 7ஆம் திகதி யாழ் செயலகக் கூட்டத்தில் ஆராயப்பட்டு விலை குறைப்புச் செய்யப்பட்டது தெரிந்ததே.

(வ)

வன்னியில்...

ஜெகநாதன் புண்ணிய மூர்த்தி (வயது 16) ஜெகநாதன் தனுஷன் (வயது 8) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இதேவேளை பனங்காமம் பகுதியில் தோட்டத்திலிருந்த குப்பைகளை எரித்த போது அதனுள் இருந்த மர்மப் பொருள் வெடித்ததில் கந்தையா புவனேந்திரன் (வயது 44) காலில் காயம் அடைந்து மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

(ச-7

அறிவித்தல்

மேவின் தையல் நிலையம்

வாடிக்கையாளர்களே!

இல 92, யாழ் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் 10.07.2000 திங்கள்முதல்

இல. 28, நவீனசந்தை மேல்மாடியில்

(யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்துக்கு அருகில்)

அனைவரின் நன்மை கருதி இயங்கவுள்ளதுஎன்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

ஆண்களுக்கான ஆடைகளை சிறந்த முறையில் தைத்து பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.

[1527]

உரிமையாளர்

அ. மேவின்

நாகம்ஸ்

(சுன்னாகம்)

இன்று முதல்

எம். ஜி. ஆர்,

ஜெயலலிதா

நடித்த

குடியிருந்த கோயில்

(ரீல்ஸ்)

11-00 2-30 (பு.நே)

(கி/462)

ஒப்படைக்கவும்

இரட்நாயகம் வசந்தகுமார் (சமுத்திரன் குடியேற்றத் திட்டம் முகமாலை பளை) ஆகிய எனது விசேட அடையான அட்டை யாழ் நகரில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ''வலம்புரி'' பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைத்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!